Reistered as a News Paper in Sri Lanka; பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஸு ஐப்பசி மீ 19 உ திங்கட்கிழமை (05 - 11 - 1990) ஹிஜ்ரி 1411 ர. ஆகிர். 16 ஓசை 251

## அத்தியாவசிய சேவைகள் மீண்டும் சீர்கேடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மின்சாரம் தடை பட்டதைத் தொடர்ந்து பல தொழில்கள் மீண்டும் பாதிப்படைந்துள்ளன.

குறிப்பாக அத்தியாவசிய சேவைகள் பலவற்றிற்கு மின்சாரம் தடை பட்டதால் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மானிப்பாய் மருத்துவமனைக்கு தொடர்ச்சியாக ஜென

(4 ஆம் பக்கம் பார்க்க)

20க்கு மேற்பட்ட இராணுவம் பலி

பன்னிரெண்டு புலிகள் வீரமரணம்

புலிகளால் ஆயுதங்கள் மீட்பு

# மாவிட்டபுரம் மினி முகாம் புலிகளால் தகர்ப்பு

(மாவிட்டபுரம்)

சிறிலங்கா இராணுவத்தினரின் மாவிட்டபுர மினிமுகாம் நேற்று முன் தினம் இரவு 8.40 இற்கு விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் இருபதிற்கும் மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அவர்களிடம் இருந்த பல ரக ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இந்த மோதலின்போது மூன்று பெண் போராளிகள் உட்பட பன்னிரெண்டு விடுதலைப்புலிகள் வீரமரணமடைந்தனர்.

இச்சம்பவம் பற்றி மோதல் இடம்பெற்றபகுதியில் இருந்து கிடைக்கும்செய்திகள்தெரிவிப்பதாவது நேற்றுமுன்தினமிரவு 8.40 மணியளவில் விடுதலைப் புலிகள் மாவிட்டபுரம் மினி முகாம் மீது நடத்திய அதிரடித் தாக்குதலில் அம்முகாமில் இருந்த இருபதிற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப் பட்டதோடு பலர் படுகாயம் அடைந்தனர். காயமடைந்த இராணுவத்தினரைத் தூக்கிக் கொண்டு மீதமிருந்த இராணுவத்தினர் மாவிட்டபுரம் பிரதான முகாமிற்குள் ஓடிவிட்டனர் என்றும் தெரியவருகின்றது.

## தெல்லிப்பளை ப. நோ. கூ. ச. களஞ்சியம் சேதம்

(தெல்லிப்பளை)

நேற்று முன்தினம் இரவு பதினொரு மணியளவில் மாவிட்டபுரம் பகுதியில் இருந்து சிறிலங்கா இராணுவத்தினரால் ஏவப்பட்ட ஷெல் ஒன்று தெல்லிப்பளை பல. நோ. கூ. சங்க களஞ்சிய அறையில் வீழ்ந்து வெடித்ததால் பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் சேதத்திற்குள்ளாயின. அங்கு நிவாரணம் வழங்குவதற்காக வைக்கப்பட்டிருந்த அரிசி, சீனி மூடைகள் சிதறிக் காணப்படுகின்றன. இச் சங்கத்தின் லொறி ஒன்றும் பலத்த சேதத்திற்குள்ளாகியது. (ச)

## மறவன் வீரமரணம்

(மன்னார்)

சிறிலங்கா இராணுவத்தினருடன் நேற்றைய தினம் மாங்குளத்தில் நடைபெற்ற மோதலின் போது 2 ஆவது லெப் மறவன்(சிங்கராஜா சிறீகாந்தரூபன் முல்லைத்தீவு) என்பவர் வீர மரணமடைந்துள்ளார்.

இவருக்குதமிழீழவிடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத்தெரிவித்துக்கொள்கின்றனர். (மு)

## மேலும் இருஅமைச்சர்கள் இராஜினாமா

(டெல்கி)

வி. பி. சிங்கின் தேசிய முன்னணி அரசாங்கத்திலிருந்து நேற்று இரு அமைச்சர்களான

(4ஆம் பக்கம் பார்க்க)

## விடத்தல்தீவில் குண்டுவீச்சு இளைஞர்பலி; ஒருவர்காயம்

(மன்னார்)

விடத்தல் தீவில் பொம்மர்கள் குண்டுவீச்சுத் தாக்குதல் மேற் கொண்டதில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றொருவர் படுகாயமடைந்தார். வீடொன்று முற்றாகச் சேதமடைந்தது.

நேற்றையதினம் விடத்தல் தீவு என்னுமிடத்தில் சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் விமானத் தாக்குதலை மேற்கொண்டன.

இத்தாக்குதலால் சிவாப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று பெண் போராளிகள் உட்பட பன்னிரண்டு புலிகள் வீரமரணம்

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் மினிமுகாம் தாக்குதலில் மூன்று பெண் போராளிகள் உட்பட பன்னிரண்டு விடுதலைப் புலிகள் வீர மரணம் அடைந்தனர்.

வீரமரணமடைந்த புலிகளின் விபரம் வருமாறு:

மேஜர் சஞ்சிகா (சுந்தர்ராஜா கலைச்செல்வி கோவில் சந்தை கரவெட்டி) கப்டன் அருந்ததி (சண்முகநாதன் சிவரஞ்சினி நாயன் மார்கட்டு) லெப்டினன்ட் காஞ்சனா (கணபதிப்பிள்ளை சறோஜினி வல்வெட்டித்துறை) லெப்டினன்ட் மரிக்கார் (செல்வமாணிக்கம்

(4ஆம் பக்கம் பார்க்க)

## மோதலைத் தொடர்ந்து குடிமனைகள் மீது ஷெல் தாக்கு

(ஊர்காவற்றுறை)

நேற்று முன்தினம் இரவு 8 மணிக்கு ஊர்காவற்றுறை சிறிலங்கா இராணுவ முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட இராணுவத்திற்கும் புலிகளுக்குமிடையில் கடும்மோதல் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து முன்னேற முடியாத இராணுவம் முகாமிற்குப் பின்வாங்கியது. அதனைத் தொடர்ந்து நாரந்தனை, கரம்பன் ஆகிய பகுதிகளை நோக்கி இராணுவம் சரமாரியாக ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டது.

சேத விபரங்கள் தெரியவில்லை. (ச)

## பதினைந்து படையினர் பலி

(கோண்டாவில்)

நேற்று முன்தினமிரவு மாவிட்டபுரம் இராணுவ முகாம் காவல் அரண்கள் நான்கின் மீது விடுதலைப்புலிகள் ஒரே நேரத்தில் மேற்கொண்டதாக்குதலில் ஒரு காவல் அரண் கைப்பற்றப்பட்டதாகவும், மூன்று காவல் அரண்கள் சேதப்படுத்தப்பட்டதாகவும் விடுதலைப்புலிகள் வட்டாரங்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இரு ஆர்.பி.டி.எல்.எம்.ஜி. உட்பட பல ஆயுதங்கள் புலிகளால் மீட்பு

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் மினிமுகாம் தாக்குதலின்போது சிறிலங்கா இராணுவத்தினரிடம் இருந்து விடுதலைப்புலிகளினால் பல ரக சுடு படைக்கலன்கள் கைப்பற்றப்பட்டன. அவ்வாறு கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

★ ஆர்.பி.டி.எல்.எம்.ஜி. -02
★ ரீ 56 – 2 - 06
★ ரீ 56 - 1 - 02
★ ரீ 81 - 02
★ ரவைகள் - 3849
★ லிங். – 750
★ மகசீன் – 12
★ கோல்சர் - 01
★ ரைபிள் கிரனெட் - 07

## இந்தியாவில் தேர்தலின் முன் யுத்தம் முடிவடைய வேண்டும்

- ஸ்ரான்லி திலகரத்தின

(கொழும்பு)

இந்தியாவில் தேர்தல் ஒன்று நடைபெறுவதற்கு முன்னர் வடக்குக் கிழக்கு யுத்தத்தை முடிவுக்குகொண்டு வர பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேயரத்தினா நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரான்லி திலகரத்தினா கோரிக்கை விடுத்துள்ளார். இந்தியாவில்டிசம்பர் மாதம் தேர்தல் ஒன்று நடைபெறக் கூடிய நிலை உருவாகியுள்ளது. தேர்தல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 11 படை பலி; பலர் படுகாயம்

(கொழும்பு)

காங்கேசன் துறைக்கும், மாவிட்டபுரத்திற்குமிடையில் இருந்த இராணுவ நிலைகள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலினால் குறைந்தது பதினொரு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், பலர் படுகாயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இடம்பெயர்ந்த ஊழியர்கள் பிரேமதாஸாவிற்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளாலும் ஊர்காவல் படைகளின் அட்டகாசத்தினாலும் இடம்பெயர்ந்த அரச ஊழியர்கள் நேற்று இரண்டாவது தடவையாக நல்லூர் சாதனா பாடசாலையில் கூடினர்.

மீண்டும் இவர்கள் தமது பதவிகளைப் பொறுப்பேற்பதற்கு உயிருக்கு உத்தரவாதம் இல்லாத காரணத்தால் தாம்

(4 ஆம் பக்சம் பார்க்க)

## மன்னாரில் இராணுவத்தினரை புலிகள் வழிமறித்துத் தாக்குதல்

(மன்னார்)

சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றைய தினம் பி. எம். சி. கட்டடத்தில் அமைந்துள்ள இராணுவமுகாமில் இருந்து எருக்கலம்பிட்டிக்குச் செல்ல முற்பட்டபோது இடைவழியில் வைத்து தமிழீழ விடுதலைப்புலிகள் எதிர்த் தாக்குதலை மேற் கொண்டனர்.

இத்தாக்குதலில் படையி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ரஞ்சன் தலையிடவேண்டாம்

— அஸ்ரப்

(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பகுதியில் முஸ்லிம் மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் இடையில் ஏற்பட்ட நெருக்கடிக்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ்கட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

டில்கா வாச் வேக்ஸ்

**DILKA WATCH WORKS**

வாடிக்கையாளரின் வசதிக் கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி, ஆனைக் கோட்டையிலும் இல. 3 சித்தன்கேணி றோட் பண்டத்தரிப்பிலும் இயங்குகின்றது. சகல மணிக்கூடுகளும் றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும் சகல எலக்ரோனிக் பற்றறிகளும் விற்பனைக்கு உண்டு. (B-1554)

இராசா டீசல் என்ஜினியர்ஸ்

திங்கட்கிழமை 05-11-1990 முதல் பழைய இடமாகிய 180. பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் மீண்டும் சேவையை ஆரம்பிக்கின்றது என்பதை அறியத் தருகின்றோம். (796)


# மாவீரர் தினத்தையொட்டி தென்மராட்சி விழாக்கோலம்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினத்தை ஒட்டி தென்மராட்சிப் பகுதியில் கொண்டாட்டத்திற்காக வெகு துரித வேலைப்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

தென்மராட்சியில் உள்ள ஒவ்வொரு கிராமங்களிலும் மக்கள் தாமாக வீதிகளில் கொட்டகைகள் அமைத்து வருகின்றனர். கைதடிப் பகுதியில் பிரதான வீதியின் மேலாக பாரிய இரண்டு கொட்டகைகளை அமைத்துள்ளனர். மேலும் சாவகச்சேரி கொடிகாமம் ஆகிய பகுதிகளில் மாவீரர் தின அலங்காரக் கொட்டகைகள் அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் யாவும் நடைபெற்று வருகின்றன.

பாடசாலைகள் ரீதியாக மாணவர்கள் மாவீரர் நாளை ஒட்டி பல ஆயத்தங்களை செய்து வருவதும் மாணவர்கள் மட்டத்திலிருந்து தெரிய வருகிறது. தென்மராட்சியில் உள்ள ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து தமிழீழ மண்ணிற்காக உயிரிழந்த போராளிகளிற்கு அஞ்சலி செலுத்துவதற்காகப் பல நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்து வருகின்றனர்.

இதேவேளை சாவகச்சேரி நகர்ப்பகுதியிலும் ஒவ்வொரு சிற்றூரவை வாரியாக வீதிகளில் கொட்டகை அமைப்பதற்கான நிதி திரட்டும் வேலைகள் மிக மும்முரமாக இடம் பெற்றுவருகின்றன. போராளிகளின் அஞ்சலிக்காக வருடாந்தம் கொண்டாடப்படும் இந்த மாவீரர்தினத்திற்காக மக்கள் தாமாக முன்வந்து நிதி செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (லோ)

## தபால் நிலையம் இடமாற்றம்

(கொழும்புத்துறை)

முல்லைத்தீவில் ஏற்பட்ட இராணுவப் போர், வானத் தாக்குதல்களால் முல்லைத்தீவு மாவட்ட தபால் அத்தியட்சர் அலுவலகம், முல்லைத்தீவு தபால் அலுவலகம் ஆகியன புதுக்குடியிருப்பில் உள்ள தனியார் வீடொன்றில் செயல்பட்டு வருகின்றன.

முல்லைத்தீவில் இருந்து அலுவலகத்திற்குரிய தளபாடங்களும், ஆவணங்களும் இராணுவ நடவடிக்கைகளால் எடுத்துவர முடியாததால் புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறச் சங்கத்திலும், பாடசாலையிலும் பெற்றுள்ள ஒரு சில தளபாடங்களைக் கொண்டு செயல்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இங்கு கடமையாற்றும் ஊழியர்கள் தபாற் சேவையை சீராக நடாத்தத் தடையாகவுள்ளதாக கொழும்பிலிருந்த ஆவணங்களையும், தளபாடங்களையும் பெற்று தபாற் சேவையை சீராக்க மாவட்ட தபால் அத்தியட்சகர் திரு சு. பரராசசிங்கம், மாகாண தபால் அத்தியட்சகர் திரு. எஸ். எம். சேதுகாவலருடன் தொடர்பு கொண்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## சுகாதார வசதியின்றி மக்கள் அவதி

(கோப்பாய்)

வலிகாமம் வடக்கு பகுதியில் இடம்பெற்று வரும் இராணுவ போர் நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் அகதிகளாக தங்கியிருக்கும் சுமார் 200க்கும் மேற்பட்ட குடும்பத்தினர்கள் இங்கு மலசலகூட, சுகாதார வசதிகள் இன்றி அல்லலுற வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குள்ளாகியுள்ளனர் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு மலசல கூட வசதியின்மையால் அயல் வீடுகளைத் தேடிச் செல்லவேண்டிய நிலையில் பெரும் சிரமத்தை எதிர் நோக்கி இங்குள்ள அகதி மக்கள் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

## கால்நடைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை

(ஊர்காவற்றுறை)

தீவுப்பகுதியில் பெரும் போக வேளாண்மை ஆரம்பிக்கப்பட்டு விட்டதால் விவசாயத்திற்கு ஊறு செய்யும் கட்டாக்காலிமாடுகள் சுட்டுக் கொல்லப்படுமென அறிவிக்கப் பட்டுள்ளது.

கட்டாக்காலிகளின் உரிமையாளர்கள் தமது கால்நடைகளை உடனடியாக கட்டி வளர்க்கும்படி கேட்கப்படுகின்றார்கள். கட்டாக்காலி கால்நடைகளைப் பிடிப்பதற்கு பிடிகாரர்களை நியமிக்க இப்பகுதி சிற்றூரவைகள் நடவடிக்கைகள் எடுத்துள்ளன. (15)


# விக்னா டியூஷன் சென்ரர்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

**கலந்துரையாடல்**

O/L Day Class [5 - 11 - 90 திங்கள் காலை 9மணி]

O/L Sat, Sun [10-11-90 சனி காலை 9மணி]

O/L Evening Class [5 - 11 - 90 திங்கள் பி. ப. 3ணி]

ஆண்டு 6, 7, 8, 9 [5 - 11 - 90 திங்கள் பி. ப. 3மணி]

**A/L கலை, வர்த்தக வகுப்புகள்**

A/L Sat, Sun – 90, 91, 92 ஆம் ஆண்டு [10 - 11 - 90 காலை 9மணி]

A/L Day Class – 90ஆம் 91 ஆம் ஆண்டு [12 - 11 - 90 காலை 9மணி]

மீண்டும் வகுப்புகள் ஆரம்பிப்பதற்கான நேர அட்டவணை சம்பந்தமாகவும் மேலும் விபரங்கள் பற்றிய கலந்துரையாடலில் சகல மாணவர்களும், ஆசிரியர்களும் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

குறிப்பு:- வெளிமாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்த சகல மாணவர்களும் மேற்படி கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

அதிபர்

(B-1553)


# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வராசா (மாமா)

மண்ணில் அவதரிப்பு 14 - 05 - 1953 | அரக்கரால் அழிப்பு 05 - 11 - 1988

குறிக் கோளற்ற கயவரால்
குதறப்பட்ட செல்வா மாமா
பதவி வெறிபிடித்த துரோகிகள் -உம்மை
படுகொலை செய்து விட்டார்
தணியுமோ உமது தமிழீழ வேட்கை!

(B/ 1535) மனைவி, குழந்தைகள்.

# ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி நாகேஸ்வரி விஜயசிங்கம்

அவர்கள்

மலர்வு: 15-6-1940 உதிர்வு: 15-11-1989

திதி 05-11-1990

நீண்டவுந்தன் பிரிவெங்கள் நெஞ்சில் நெருடுகையில்
ஆண்டொன்று மலர்ந்ததம்மா ஆறிரண்டு திங்களிலே
வேண்டுவதெல் லாந்தந்து விரும்பியுமை நாமழைத்தோம்
மீண்டுமொரு காலெங்கள் வீடுவந்து சேராயோ

கணவன் (உரிமையாளர், கலாசோடா கம்பனி), மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

166/3 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (R/ 795)

# 1st Death Anniversary

of

**Ret. Police Officer**

**MR. M. SELVARATNAM**



Amidst Chaos and cries, we see your guiding hand with gesture and smile. We hear your commanding voice, with greetings and praise. We feel your courageous strength, with love and blessings in length. We know for certain, 'Appah' **You are not dead. You are just away beyond life's Gateway.'**

loved and remembered
by your loving
**Wife, Children, In-laws,
Grand Children
and loved ones.**

Sangarapillai Road,
Manipay South.

(B. 1559)

## சிந்தனைக்கு

தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் அன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து.

— திருவள்ளுவர்


# ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம் 05-11-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


# தென் ஆசியா மீது மேற்கின் பார்வை மாறுகிறது

கடந்த ஓரிரு மாதங்களில் தென்ஆசியா பற்றிய மேற்குலகத்தின் கொள்கையில் குறிப்பிடக்கூடிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமை மிகவும் தெளிவாகத் தெரிய ஆரம்பித்துள்ளது. தென்ஆசியாவில் மேற்குலகத்தினரின் ஆப்த நண்பர்களான பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளின் விவகாரங்களில் மேற்குலகம் சற்று வேறுபட்ட போக்கைக் கடைப்பிடிக்கப் போவதற்கான சில சமிக்ஞைகள் தென்படத் தொடங்குகின்றன.

பாகிஸ்தானுக்கான 600 மில். டொலர் இராணுவ பொருளாதார உதவிகளை அமெரிக்கா (பாகிஸ்தான் தனவிடம் அணுவாயுதம் இல்லை என்பதை நிரூபிக்கா விட்டால்) நிறுத்தப் போவதாக மிரட்டி வருகின்றது. அதேவேளை இலங்கையைப் பொறுத்து இதுவரை காலமும் நடைபெற்ற மனித உரிமைகள் மீறல்கள், இனப்படுகொலைகளைக் கண்டுகொள்ளாமல் இருந்த மேற்குலகம் சற்றுப்பொழுது ஒன்றன்பின் ஒன்றாக சிறிலங்கா அரசாங்கத்தின மனிதஉரிமைமீறல்கள், இன ஒடுக்குமுறை பற்றி கவலையும் கண்டனமும் தெரிவிக்கத் தொடங்கியுள்ளன. சிறிலங்கா மீதான கண்டனத்தை வெளியிடுவதில் அவுஸ்திரேலியா - ஐரோப்பியப் பொருளாதார சமூக நாடுகள் (பிரிட்டன், ஜேர்மனி, பிரான்ஸ் உள்ளடங்கும் மேற்கு ஐரோப்பிய நாடுகள்) கனடா வரிசையில் இன்று அமெரிக்காவும் இடம்பெற்றுவிட்டது.

இவ்வாறாக இந்த மேற்குலகத்தின் வெளியுறவுக் கொள்கையில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்திற்கு இன்று உலக நாடுகள் யாவும், குறிப்பாக மூன்றாம் உலக நாடுகள் தமது வெளிநாட்டுக் கொள்கைகளில் மேற்கொள்ள வேண்டியிருக்கும் மாற்றம் காரணமே ஒழிய வேறொன்றும் இல்லை.

சோவியத் அதிபர் கொர்பசேவின் ''பெரஸ்ரொய்கா'' உலகின் நடைபெற்ற கெடுபிடி யுத்தத்திற்கு மட்டும் முற்றுப்புள்ளிவைக்கவில்லை. உலகநாடுகளுக்கு இடையில் இருந்த உறவு நிலைகளிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. குறிப்பாக கிழக்கு ஐரோப்பாவில் சோவியத் ரஷ்யா நடந்து கொள்ளும் விதமும், ஈராக்-குவைத் விடயத்தில் சோவியத் நடந்து கொள்ளும் விதமும் பழைய சோவியத்தின் நட்பு நாடுகளுக்கு பெரும் நெருக்கடிகளை ஏற்படுத்தியுள்ளதோடு சோவியத் யூனியனை எதிர்காலத்தில் நம்பியிருக்க முடியுமா? என்ற கேள்வியே அந்த நாடுகளில் ஏற்பட்டுள்ளது. ஆகவே புதிய உலக உறவுமுறைக்கு ஏற்ப அந்த நாடுகளும் நட்பு நாடுகளைத் தேடவேண்டி உள்ளன.

இந்நிலையில், அமெரிக்கா உட்பட்ட மேற்குலகத்தின் கொள்கைகளும் குறிப்பிடக் கூடிய அளவில் மாற்றம் அடைந்தன. மேற்குலக நாடுகள் முக்கியமாக இதுவரை மூன்றாம் உலக நாடுகளுக்கு வழங்கிவந்த நிதியுதவிகளைக் குறைத்துவிட்டு, கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு போதியளவு நிதியுதவிகளை வழங்க முன்வந்துள்ளன. அதேவேளை சோவியத் ரஷ்யாவுடன் நெருங்கிய நட்பு நாடுகளாக இருந்த மூன்றாம் நாடுகளை வளைத்துப் போடும் முயற்சியிலும் இறங்கியுள்ளன.

இவற்றின் வெளிப்பாடே, இலங்கை, பாகிஸ்தான் மீதான கண்டனங்களாகும். இக்கண்டனங்கள் மூலம் சில புதிய உறவுகளை தென் ஆசியாவில் அவை உருவாக்கப்பார்க்கின்றன. அவ்வுறவு முறையால் முன்னைய நண்பர்களைவிட கூடுதல் இலாபம் பெறலாம் என்பது அவர்கள் கணிப்பாகும்.

இதற்கும் மேலாக கடந்த காலத்தின் அடக்குமுறை அரசாங்கங்களுக்குத் தொடர்ச்சியாக ஆதரவு கொடுத்து வந்த அமெரிக்க ஏகாதிபத்தியம் அடக்குமுறை அரசுகள் உள்நாட்டில் நெருக்கடிகளை எதிர் நோக்கும் போது அவற்றின் காலைவாரிவிடும் வரலாற்றையும் கொண்டது ஆகும். எடுத்துக்காட்டாக பிலிப்பைன்ஸில் மார்க்கோஸ் அரசிற்கு முழு ஆதரவு அளித்து வந்த அமெரிக்கா கடைசி நேரத்தில் காலைவாரிவிட்டமையைக் குறிப்பிடலாம். அதாவது தனது நலனுக்காக நண்பர்களின் காலைவாரி விடும் நடவடிக்கையாகும். இந்த நிலைமையை ஒத்த போக்கே இன்று பாகிஸ்தானிலும், இலங்கையிலும் உருவாகி வருகின்றது. இவ்விரு நாடுகளிலும் அரச அடக்குமுறைக்கு எதிராக பலமான போராட்டங்கள் வலுவடைந்து வருவதினால் எதிர்காலத்தில் இந்த நாடுகளில் ஏற்பட்ப் போகும் மாற்றங்களுக்கு ஏற்படவும் கொள்கை மாற்றங்களை மேற்குலகம் செய்யவேண்டியுள்ளது.

இவையாவற்றினதும் வெளிப்பாடே அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளின் தென் ஆசிய மீதான கொள்கை மாற்றம் ஆகும். அதைவிடுத்து தமிழர் மீதான ஒடுக்குமுறைக்கு எதிரான நடவடிக்கை அல்ல இது. ஆனால் இவ்விடயத்தில் இலங்கையில் நடக்கும் இனப்படுகொலைகள் வெளி உலகில் அம்பலப்படுத்தப்படுகின்றன என்பதையிட்டு மட்டும் இலங்கைத் தமிழர் சற்று திருப்தி அடையலாம்.

# “உதிக்கும் திசை நோக்கி உன்னத பயணம்” 4

நீங்கள் குறிப்பிடும் பகுதியிலுள்ள மக்கள் உயிர் வாழ்வதற்கு ஏதோ சாப்பிட வேண்டும் தானே? என்ன செய்கிறார்கள்? என்று கேட்டேன்.

வேதனையுடன் பெருமூச்சு விட்டவாறே தொடர்ந்தார். ஈச்சமரத்தின் குருத்தை வெட்டிச் சாப்பிடுகிறார்கள். காட்டில் கிடைக்கும் சில வகைக் கொடிகளின் கீழ் உள்ள கிழங்குகளைப் பிடுங்கி கொண்டு வருகிறார்கள், தொலைதூரத்துக்குச் சென்று குளங்களில் மீன்பிடித்து அதை மட்டுமே சாப்பிடுகிறார்கள். இவர்கள் என்ன நடந்தாலும் தமது மண்ணை விட்டுச்செல்லமாட்டார்கள். தமது மண்ணைப் பிரிவது என்பது இவர்களால் முடியாத காரியம். தற்போதைய போரில் கூட இலக்கந்தையில் 10 பேரும், மட்டப்புக்களியில் 35 பேரும் இராணுவத்தினால் கொலைசெய்யப்பட்டு எரிக்கப்பட்டார்கள். ஆனாலும் அகதிகளாகச் செல்வதற்கு இவர்கள் முயலவில்லை என்றார்.

ஈச்சைமரமும், கிழங்குகளும் மீனும் எத்தனை நாட்களுக்குக் கிடைக்கும் என்று கேட்டேன். ஒரு நாள் அந்தப் பகுதியால் எமது போராளி ஒருவன் சென்றான். ஏதோ தேவைக்கு தீப்பெட்டி தேவைப்பட்டது. ஒரு வீட்டில் சென்று தம்பி தீப்பெட்டி இருக்கிறதா? என்று கேட்டான். ''அண்ணை நாங்கள் அடுப்பு மூட்டியே ஐந்து நாட்கள். எங்களிடம் தீப்பெட்டி கேட்கிறீர்களே! என்றான் அந்தச் சிறுவன்'' என்றார் ரூபன். நான் அதிர்ந்துபோய் நின்றேன். இதற்கே இப்படி என்றால் இனிச் சொல்லப் போவதைநீங்கள் கேட்டால்... என்றவாறே தொடர்ந்தார்:

பசியின் கொடுமையால் உப்பூரலில் இருந்து தோப்பூர் என்ற முஸ்லிம் கிராமத்துக்கு பிச்சை எடுக்கச் சென்ற முதியவர்களை 13.9 90 அன்று அங்குள்ள முஸ்லிம் ஊர்காவல் படையினர் அடித்துக் கொன்றுள்ளனர். சிலரைக் காயப்படுத்தியுள்ளனர் என்றார் ரூபன். கதிர்காமம் மாரியான் (75வயது), மாரியான் வைரவன் (75 வயது) இந்த இருவரும் கொல்லப்பட்டுள்ளனர். கந்தன் வைரவன் (70 வயது), சீனித்தம்பி கந்தையா (75 வயது), வைரவன் சித்திரவேல் (60 வயது) ஆகியோர் நடமாட முடியாதளவுக்கு படுகாயப்படுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் தமிழருக்கு எவரும் பிச்சைகொடுக்கக்கூடாது எனவும் எச்சரித்துள்ளனர் என்றார்.

இது மட்டுமல்ல அடுத்த நாள் 14.9 90 அன்று காலை காணாமற்போன இவர்களை தேடிப் போன ஆறுபேரையும் முஸ்லிம் ஊர்காவல் படையினர் பிடித்துக் கொண்டனர். இவர்களின் நிலைமை என்னவென்று இன்னும் தெரியவில்லை. எனக்கென்றால் இவர்கள் உயிரோடிருப்பார்கள் என்ற நம்பிக்கையில்லை என்றார். உப்பூரல், முதியவர்கள் கொல்லப்பட்டு, காயமடைந்த அதே தினம் 13. 9. 90 அன்று நல்லூரில் இருந்து தோப்பூர் சென்ற க. வைரமுத்து (65 வயது), கந்தையா (76 வயது) வைரன் முத்துக்குமார் (46 வயது) ஆகியோரையும் கடுமையான சித்திரவதைக்குள்ளாக்கியுள்ளனர் முஸ்லிம் ஊர்காவல்படையினர். வயது போன இவர்களையே இப்படிச் செய்கிறார்கள் என்றால் மற்றவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமா?

இந்தப் பகுதியில் உள்ள மக்களின் பிரதான உணவு சோளம். அண்மைய இராணுவ நடவடிக்கையின்போது இவர்களின் வீடுகளில் இருந்த சோளத்தைஇராணுவத்தினர் எரித்துள்ளார்கள்பிச்சைக்குப் போனால் முஸ்லிம் ஊர்காவல் படையினர் கொல்கின்றார்கள். அகதி முகாமுக்குப் போனால் அங்கும் மரணம். இந்த நிலையில் செஞ்சிலுவைச் சங்கம் அகதிமுகாமுக்குப் போனால்தான் நிவாரணம் தரமுடியும் என்று சொல்கிறது என்றார் ரூபன். தொடர்ந்து இதையெல்லாம் நீங்கள் கண்ணால் காணத்தானே போகிறீர்கள் என்றார். அவர் கூறியது போலவே அதற்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்கத்தான் செய்தது.

திரு. மாத்தயாவின் வருகை திருமலை மாவட்டத்திலுள்ள தமிழ் மக்களுக்குத் தெரிந்துவிட்டது. ஆங்காங்கே அகதி முகாம்களிலும், காடுகளிலும் இருப்போர் எப்படியோ நாம் போகும் பாதையில் கூடிவிடுவார்கள். இவர்களுக்கே சாப்பாடு இல்லை. அப்படியிருந்தும் ஒரு வாழைக்குலையுடன் நின்றார்கள். ஏழ்மை நிலையில் இருந்தபோதும் அவர்களின் இந்தப்பண்பு எம்மை நெகிழ வைத்தது. அவர்கள் கொடுத்த வாழைக்குலையைப் பெற்றுக்கொண்டோம். ட்றக்டரில் இருந்தபடியே அனைவருமாகச் சாப்பிட்டோம். வாழைக்குலையின் அடியில் சிறிய காய்கள் இருந்தன. குறிப்பிட்ட இப்பகுதிக்குள்வந்தபோதுதான் தண்டை வெளியே வீசினோம். எங்கிருந்தோ இதைக் கவனித்தவர்கள் போட்டி போட்டுக்கொண்டு ஓடிவந்து இதையெடுத்து ஆளுக்கொரு காய்களாகப் பிடுங்கினார்கள் அவசர அவசரமாக முண்டி விழுங்கினார்கள் அவர்கள் ஓடி வந்த வேகமும், காய்களைப் பிடுங்கியவிதமும், அவர்களின் கோலமும் எம் மனதில் சம்மட்டியால் அறைந்தது போலிருந்தன.

(தொடரும்)



> இவர்களின் வீடுகளில் இருந்த சோளத்தை இராணுவத்தினர் எரித்துள்ளார்கள். பிச்சைக்குப்போனால் முஸ்லிம் ஊர்காவல் படையினர் கொல்கிறார்கள். அகதிமுகாமுக்குப் போனால் அங்கும் மரணம். இந்த நிலையில் செஞ்சிலுவைச்சங்கம் அகதிமுகாமுக்குப் போனாலதான் நிவாரணம் என்று சொல்கிறது.
>
> — ரூபன்

பாரதிய ஜனதா - இந்திரா காங்கிரஸ்

# எவற்றுடனும் சேர்வதில்லை தேசிய முன்னணி தீர்மானம்

(டில்லி)

பாரதிய ஜனதாக் கட்சியுடனோ இந்திரா காங்கிரஸ் கட்சியுடனோ கூட்டுச் சேருவதில்லை என தேசிய முன்னணித் தலைமைக் குழு தீர்மானித்துள்ளது.

கடந்த வியாழன் புதுடில்லியில் தேசிய முன்னணிக் கட்சித் தலைவர் என். டி. ராமராவ் தலைமையில் நடைபெற்ற தலைமைக் குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஜெயபால் ரெட்டி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இப்போதுள்ள குழப்பமான நிலையில் இடதுசாரிக் கட்சிகளின் ஒத்துழைப்பு வலுப்படுத்திக் கொள்ளப்படும் என்றும் ஜெயபால் ரெட்டி தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய பிரதமர் வி. பி. சிங் இப்போதுள்ள பிரச்சினை நாட்டின் ஒற்றுமையை காப்பதுதான் அன்றி ஆட்சியில் நீடிப்பது என்பதல்ல என்று தெரிவித்தார்.

மேலும் வி. பி. சிங்கின் தலைமையில் மாற்றம் கொண்டு வருவது பற்றி ஜெயபால் ரெட்டியிடம் செய்தியாளர்கள் கேட்டபோது இது குறித்தே தாம் பேசவில்லை என்றும் மாற்றம் ஏற்படமாட்டாது என்றும் தெரிவித்தார்.

இடைக்கால ஏற்பாடுகள், இடைக்காலத் தேர்தல்கள் குறித்த இந்தக் கூட்டத்தில் ஆலோசனை நடாத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை தேசிய முன்னணி கட்சியின் பாராளுமன்றக் கூட்டம் தற்போதைய அரசியல் நிலைமைகளை மதிப்பீடு செய்வதற்காக நேற்று புதுடில்லியில் இன்று நடைபெறுகிறது.

அதே நேரம் முன்பு தேசிய முன்னணிக் கட்சி எடுத்த தீர்மானத்தின்படி இந்திரா காங்கிரசுடனோ பாரதிய ஜனதாக்கட்சியுடனோ கூட்டுச் சேரப்போவதில்லை என்று தேசிய முன்னணிக் கட்சியின தலைவர் என். டி. ராமராவ் தெரிவித்துள்ளார். குஜராத் சட்டப் பேரவையில் நம்பிக்கை வாக்குக் கோரியபோது இந்திரா காங்கிரசின் ஆதரவைப் பெற்ற முதலமைச்சருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என்றும் அவர் கூறினார்.

# ஐந்து மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை

(கொழும்புத்துறை)

யாழ். திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையம், யாழ். லக்சலா கூட்டுத்தாபனம் ஆகியவற்றைச் சேர்ந்த ஊழியர்களுக்குக் கடந்த ஐந்து மாதங்களாக ஊதியம் வழங்கப்படவில்லை.

இந்த அலுவலகங்களைச் சேர்ந்த ஊழியர்கள் ஐந்து மாத வேதனமும் இன்றிப் பலத்த சிரமத்தின் மத்தியில் தமது வாழ்க்கையை நடாத்துவதாக அங்கு கடமையாற்றும் ஊழியர் ஒருவர் தெரிவித்துள்ளார். (24)

நெடுங்குளம் காட்டுப்பகுதியை

# சுற்றி வளைக்க முயன்ற இராணுவம் - புலிகள் மோதல்

(திருக்கோணமலை)

மூன்று இராணுவ முகாம்களைச் சேர்ந்த பெருந்தொகையான இராணுவத்தினர் காட்டுப் பகுதியைச் சுற்றி வளைக்க முயன்றபோது விடுதலைப்புலிகள் எதிர்த் தாக்குதலை மேற்கொண்டதில் இராணுவத்தில் பலர் கொல்லப்பட்டனர்; புலிகள் தரப்பில் ஒருவர் வீரமரண மடைந்துள்ளார்.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது, நேற்று முன்தினம் திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள வெல்கம் விகாரை, இறக்கக்கண்டி, நிலாவெளி ஆகிய இராணுவ முகாம்களில் இருந்து நெடுங்கேணிக்குளம் காட்டுப் பகுதியைச் சுற்றி வளைத்துத் தேடுதலை மேற்கொள்ள முயன்ற சிறிலங்கா இராணுவத்தினரை வழி மறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ந்து முன்னேற முடியாதவாறு எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர்.

இத் தாக்குதலால் இராணுவத் தரப்பில் பலர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இறந்தோரின் எண்ணிக்கைவிபரம் தெரியவில்லை விடுதலைப் புலிகள் தரப்பில் வீரவேங்கை கேணேஸ் என்பவர் வீர மரணமடைந்துள்ளார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீர வணக்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

இப் பகுதியில் இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான மோதல்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (மு)

# ஐ. நா. மனித உரிமைகள் குழு பெப்ரவரியில் இலங்கை விஜயம்

(கல்கிசை)

மனித உரிமைகள் மீதான ஐ. நா. மன்றத் தூதுக்குழு பெப்ரவரி மாதத்தில் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளது.

இத் தகவலை ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் கல்கிசையில் நடைபெற்ற செய்தியாளர்கள் மநாட்டில் தெரிவித்தனர்.

அண்மைக் காலமாக இலங்கையில் இடம்பெற்று வரும் சம்பவங்கள் குறித்து தமக்கு புகார் வந்துள்ளது என்றும் அது குறித்தே ஐ. நா. மன்ற மனித உரிமைகள் தூதுக்குழு இலங்கை வரவிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

பிரிட்டனில் பத்து வருடங்களில்

# விண்ணப்பித்த 7910 பேரில் 51பேருக்குமட்டுமே புகலிடம்

(லண்டன்)

பிரித்தானியாவில் அரசியல் தஞ்சம் கோரி கடந்த பத்து வருடங்களில் 7910 இலங்கையர்கள் விண்ணப்பம் செய்துள்ளனர் என பிரித்தானியாவின் குடியேற்ற அமைச்சர் தெரிவித்துள்ளார்.

1979-1989 வரையிலான காலத்திலேயே இவர்கள் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்திருந்தனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இவர்களில் 51 பேருக்கு மட்டுமே அரசியல் தஞ்சம் வழங்கப்பட்டிருப்பதாகவும் மீதிப் பேருக்கு அகதியாக வாழ்வதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

1988ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் பிரித்தானியாவில் இருந்து வெளியேற்றப்பட்ட தமிழர்களில் ஆறு நபர்களை மீண்டும் தனது நாட்டிற்கு, தனது சொந்தச் செலவிலேயே அழைத்துக் கொண்டது குறிப்பிடத் தக்கதாகும்.

# குருநகர் இறங்குதுறையை அதிகாரிகள் பார்வையிட்டனர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு தேவையான உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்களை குருநகரில் உள்ள இறங்குதுறை ஊடாக இறக்குவதற்கு ஏற்ற வகையில் அந்த இறங்குதுறை உள்ளதா என நேற்று முன்தினம் சில அதிகாரிகள் பார்வையிட்டுள்ளனர்.

பருத்தித்துறைக் கடலில் கொந்தளிப்பு இருப்பதால் பருத்தித்துறை இறங்குதுறையின் ஊடாகத் தொடர்ந்து பொருள்களை இறக்க முடியாத நிலை உள்ளது.

குருநகர் இறங்கு துறைக்கு கப்பலிலிருந்து இறக்கப்படும் பொருள்களை கொண்டு வருதற்கான மிதக்கும் தட்டு மனைகள் இந்த இறங்குதுறையில் தரித்து நிற்கப் போகும் கப்பல்கள் மூலம் கொண்டு வரப்படும் எனவும் தெரிகிறது. (லோ)

## சமூகம்தரவும்

(கோண்டாவில்)

யாழ் மாவட்டத்தில்கடமையாற்றும் சகல கூட்டுறவுப் பரிசோதகர்களையும் கூட்டுறவுத்திணைக்கள ஊழியர்களையும்6.11.90நாளை செவ்வாய்க் கிழமை மு. ப. 10.00 மணிக்குதிருநெல்வேலி விவசாய போதனாசிரியர்பாடசாலை மண்டபத்துக்கு தவறாது சமுகம் தருமாறு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மாதிரி நிர்வாக செயலக கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுள்ளனர்.

இந்தியாவில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடந்தால் ராஜீவ் காந்தி மீண்டும் பிரதமராக வரலாம். ஆகவே அதற்கு முன்னதாக வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்றும் திலகரத்தினா கேட்டுக் கொண்டார்.

ராஜீவ் காந்தி பிரதமராக இருந்த போது அவரது வற்புறுத்தலின் பேரிலேயே முன்னாள் ஜனாதிபதி மோசமான நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்றும் திலகரத்தினா தெரிவித்தார்.

விடத்தல்தீவில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளை தேவா (வயது 30) அல்லைப்பிட்டி என்பவரே கொல்லப்பட்டவராவார். அந்தோனிப்பிள்ளை சிவராஜா 7ஆம் வட்டாரம் விடத்தல் தீவு என்பவர் படுகாயமுற்றவராவார். (மு)

அத்தியாவசிய

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரேட்டர் இயந்திரங்கள் மூலம் மின்சாரம் வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அரிசி ஆலைகள் அனைத்தும் நின்று போய் விட்டன.

ஒரு சில வாரங்களாக பகல் நேர சுழற்சி முறை மின் விநியோகத்தின் மூலம் ஓரளவு அத்தியாவசிய சேவைகள் அண்மையில் நடைபெற்று வந்தது குறிப்பிடத்தக்கதாகும். (லோ)

மூன்று பெண்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரவீஸ்வரன் பெரியகுளம் நெடுங்கேணி) 2வது லெப் அன்றூ (நாகமுத்து திரவியநாதன் புன்னாலைக்கட்டுவன் தெற்கு) 2வது லெப் றோம் (முத்துலிங்கம் கணேசமூர்த்தி மட்டுவில் சாவகச்சேரி) சேகர் (வித்தியானந்தன் அன்புகுமாரன் இணுவில் கிழக்கு) டில்லி (தேவதாஸ் சாம்ஜன் மாதிரிக் கிராமம் சிலாவத்தை முல்லைத்தீவு) ஈசன் (சுப்பிரமணியம் சங்கர் அரியாலை மேற்கு) கார்த்திக் (சிதம்பரநாதன் கோணேஸ்வரன் பொற்பதி வீதி கொக்குவில் கிழக்கு) பாஞ்சாலன் (சற்குணம் மாதவன் மணற்பகுதி கரணவாய் கிழக்கு கரவெட்டி) றாயன் (மட்டக்களப்பு)

வீரமரணமடைந்த புலிகளுக்கு விடுதலைப் புலிகள்தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

இடம்பெயர்ந்த

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மீள இழக்குமாகாணத்துக்கு செல்லமுடியாத நிலையையும் தமது தொழிலுக்கு தொடர்ந்து பாதுகாப்பு அற்ற நிலையையும் இடம்பெயர்ந்துவிட்டதால் ஜூன் மாதம் 13ஆம் திகதியிலிருந்து சம்பளமோ, அல்லது சம்பள முற்பணமோ பெற்றுக்கொள்ளாத நிலையில் ஜீவாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள கஷ்டநிலை பற்றியும் யாழ். அரச அதிபர் ஊடாக சிறிலங்கா ஜனாதிபதி, அதியாவசிய சேவைகள் நாயகம் ஆகியோருக்கு தமது மகஜர் ஒன்றை அனுப்புவதாக இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (லோ)

## மேஜர் கணேஸ் வீதித்திறப்பு



(நல்லூர்)

மூதூர் பிரதேசப் பொறுப்பாளர் மேஜர்கணேஸின் நான்காம் ஆண்டு ஞாபகார்த்தமாக திருநெல்வேலி மேற்கு சிவன்கோயிலடி வீதிக்கு மேஜர் கணேஸ் வீதி என்று இன்று பெயர் சூட்டப்படும். மாலை 3 மணியளவில் நடைபெற இருக்கும் இந்த வைபவத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர்கள் கலந்து கொள்வார்கள்.

மேலும்

சகாத்கான் சாஹிப், திருமதி. சிங் ஆகியோர் இராஜினாமாச்செய்தனர். இப்போதைய நிலையில் தான் தொடர்ந்தும் பதவியிலிருக்க விரும்பவில்லை எனத் திருமதி சிங் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

மன்னாரில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர் தரப்பில் உயிரிழந்தோர் எண்ணிக்கை தெரியவில்லை. இதன் பின் சிறிலங்கா இராணுவத்தினர் எருக்கலம்பிட்டிக்குத் தொடர்ந்து முன்னேற முடியாத நிலையில் ஐந்தாம் கட்டைப் பகுதியில் நிலை கொண்டுள்ளனர்.

இதேசமயம் மன்னார் மோதல்களில் இரண்டு விடுதலைப் புலிகள் வீரமரணமடைந்ததாக இரு தினங்களுக்கு முன்னர் வெளியான செய்திகள் தவறு என்றும் இரண்டு போராளிகள் மட்டும் காயமுற்றனர் என்றும் விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (மு)

கிளிநொச்சி

# டிப்போசந்தியிலும்நேற்று விமானக் குண்டுவீச்சு

(கிளிநொச்சி)

சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த நான்கு குண்டு வீச்சு விமானங்கள் நேற்று டிப்போச் சந்தியடியில் விமானத்தாக்குதலை மேற்கொண்டன.

இந்த விமானத் தாக்குதலால் இரண்டு மாடுகள் கொல்லப்பட்டன. விமானங்களின் சத்தத்தைக் கேட்டவுடனேயே மக்கள் பாதுகாப்பான இடங்களில் பதுங்கிக் கொண்டதால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன. இதைத் தொடர்ந்து கிளிநொச்சி நகர வீதிகள் வெறிச் சோடிக் காணப்பட்டன. (மு)

# வி. பி. சிங்கை பதவி விலக தேவிலால் கோரிக்கை

(டில்லி)

வி. பி. சிங் பதவியிலிருந்து விலகி மாற்றுத் தலைவருக்கு இடமளிக்க வேண்டுமென்று முன்னாள் பிரதிப் பிரதமர் தேவிலால் நேற்று டில்லியில் தெரிவித்தார். இதேவேளை நேற்றுக் காலை டில்லியில் நடைபெற்ற தேசிய முன்னணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் அதிருப்தியாளர்களான தேவிலாலும், சந்திரசேகரும் கலந்து கொள்ளவில்லை. ஜனதாதள் கட்சியின் பணிப்புகளை தான் தட்டிக் கழிக்கப் போவதில்லை என்றும் தேவிலால் கருத்து வெளியிட்டுள்ளார்.

# இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர் ஒருகோடிக்கு மேல்

(கொழும்பு)

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை ஒருகோடியைத் தாண்டிவிட்டது என வாக்காளர் பதிவு அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த வருடம் 2, 68, 025 பேர் புதிய வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்டதே இந்த அதிகரிப்புக்குக் காரணம் என்றும் அவர்கள் கூறினர்.

1988 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தல்களில் வாக்களிக்கத் தகுதியுள்ளவர்களின் எண்ணிக்கை 92, 71, 356 மட்டுமே ஆகும்.

அதேவேளை இனிமேல் நடைபெறப்போகும் தேர்தலில் வாக்களிக்கத் தகுதியுள்ளவர்களின் எண்ணிக்கை 01, 01, 39, 607 பேராக இருக்கும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

ரஞ்சன்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி

சியே காரணமென பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜேரெட்னா தெரிவித்த கருத்திற்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி பலமான ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் அஸ்ரப் இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் முஸ்லிம் மக்கள் வாக்குப் போட்டது தங்களுக்கே ஒழிய அமைச்சர் ரஞ்சன் விஜேரெட்னாவிற்கு இல்லை எனவும் தெரிவித்ததோடு அமைச்சர் ரஞ்சன் விஜேரெட்னா முஸ்லிம் விவகாரத்தில் தலையிடாமல் இருப்பது நல்லது எனவும் தெரிவித்தார்.

11 படை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் அச்செய்தியில் விடுதலைப்புலிகள் தரப்பில் பலர் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்தது.

## பதவி உயர்வு

(கொழும்புத்துறை)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் காணிப்பகுதி உதவி அரச அதிபராக பணியாற்றிய திரு. வி. எஸ். கனகரட்ணம் பூநகரி உதவி அரசாங்க அதிபராக அண்மையில் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

பதினைந்து

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் தெரிவித்தன.

மேலும் இத் தாக்குதலில் பதினைந்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், பலர் படுகாயமடைந்ததாகவும் தெரிவித்ததோடு, தமது தரப்பில் பன்னிரெண்டு விடுதலைப்புலிகள் வீரமரணமடைந்ததாகவும் தெரிவித்தன.


## மரண அறிவித்தல்

### Dr. எதிர்மனசிங்கம் (கந்தசாமி)

மானிப்பாய் சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அடம்பன் மாதா வைத்திய சாலையை வதிவிடமாகக் கொண்டவருமான டாக்டர் கே. எஸ். எதிர்மனசிங்கம் (கந்தசாமி) 31 - 10 - 90 இல் காலமானார். அன்னாரின் பூதவுடல் பெரியபண்டிவிரிச்சானில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
டாக்டர் ஸ்ரீநிவாசன்
(மருமகன்)

அடம்பன்.
(R/800)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள " ஈழநாதம் " பணிமனையில் 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 05 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.